


March 2021 Issue 3 Editor ; VM Thevarajan

# பணி ஓய்வு பெற்ற அனைத்து நண்பர்களுக்கும் : முதுமைக் கால இரகசியங்கள்.

ஒரே வார்த்தையில் வாழ்வின் இரகசியங்கள்.
நடுத்தர வயதுக்கு முன் - பயப்படாதீர்கள்.
நடுத்தர வயதுக்கு பின் - வருந்தாதீர்கள்

உங்களால் முடிந்த போதே வாழ்க்கையை அனுபவித்து மகிழுங்கள். நடக்கக் கூட முடியாத அளவு தளர்ந்து போய் வருந்தும் நிலை வரும்வரை காத்திருக்காதீர்கள். எந்தெந்த இடங்களை தரிசிக்க விரும்புகிறீர்களோ அந்த இடங்களுக்கு எல்லாம் உங்களால் முடிந்தவரை சென்று வாருங்கள்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பழைய வகுப்பு தோழர்களுடனும் சக ஊழியர்களுடனும் பால்ய சிநேகிதர்களுடனும் சேர்ந்து அளவளாவி மகிழுங்கள். ஒன்று சேர்வது உணவு அருந்துவதற்காக மட்டும் அல்ல. மீதமிருக்கும் நாட்கள் மிகக் குறைவே என்பதற்காக.

வங்கியில் உள்ள பணம் உண்மையில் உங்களுடையதாக இல்லாமல் போகலாம். செலவழிக்க வேண்டிய நேரத்தில் செலவழியுங்கள். நீங்கள் முதுமை அடைந்து கொண்டிருப்பதால் முடிந்தவரை உங்களை நீங்களே நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். எதையெல்லாம் சாப்பிட விரும்புகிறீர்களோ அதை எல்லாம் சாப்பிடுங்கள். அது நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு முக்கியமானது. உடல் நலத்திற்கேற்ற நல்ல உணவுகளை அடிக்கடி அதிகமாக உண்ணுங்கள். ஆனால் அதுவே எல்லாமும் ஆகிவிடாது. உடல் நலத்திற்கு ஒவ்வாதவற்றை ஒதுக்கித் தள்ளுங்கள். எப்போதாவது சந்தர்ப்ப சூழ்நிலையால் அவற்றை உண்ண நேரிடும்போது. குறைந்த அளவே உண்ணுங்கள்.

குணமடைந்து விடுவோம் என்ற நம்பிக்கையுடன் நோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஏழையோ, பணக்காரரோ – யாராக இருந்தாலும் பிறந்த ஒவ்வொருவரும் மூப்பு, நோய்கள் மற்றும் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். அது தான் வாழ்க்கை. நீங்கள் நோயுறும் போது, பயமும் கவலையும் கொள்ளாதீர்கள். தீர்க்கப்படாத கணக்கு வழக்குகளை முன்னதாகவே முடித்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வருத்தம் ஏதுமின்றி விடை பெற முடியும்.

மருத்துவர்கள் உங்கள் உடலைக் கையாளட்டும். இறைவனும் இயற்கையும் உங்கள் உயிரைக் கையாளட்டும். ஆனால் உங்கள் மனநிலைக்கு நீங்களே முழுப் பொறுப்பாளியாக இருங்கள்.

கவலைகள் உங்கள் நோய்களைத் தீர்க்குமென்றால் கவலைப்படுங்கள்.
கவலைகள் உங்கள் வாழ்நாளை நீட்டிக்கும் என்றால் கவலைப்படுங்கள்.
கவலைகள் உங்களை மகிழ்ச்சியானவராக மாற்றும் என்றால் கவலைப்படுங்கள்.

நமது குழந்தைகள் அவர்களுக்கான வாய்ப்புகளைத் தாமே உருவாக்கிக் கொள்வார்கள்.
கீழ்க்கண்ட பழம்பெரும் புதையல்களை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்.

- முதுமையடைந்த உங்கள் உடல் - உடல் நலத்தின் மீது மிகுந்த கவனம் செலுத்துங்கள். அதனால் உங்கள் மீது நீங்கள் முழு நம்பிக்கையுடன் இருக்க முடியும்.
- பணி ஓய்வு நிலை நிதிகள் - உங்களால் சம்பாதிக்கப் பட்ட பணத்தை உங்களுடனேயே வைத்துக் கொள்வது மிகவும் சிறந்தது.
- உங்களது முதிய வாழ்க்கைத் துணை – உங்களில் ஒருவர் முன்னர் விடைபெற இருப்பதால் உங்களது துணையோடு இருக்கும் ஒவ்வொரு நொடியும் பொன் போன்றது. புதையல் போன்றது.
- உங்களது பால்ய சிநேகிதர்கள் - வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் தவறாமல் அவற்றைப் பயன்படுத்தி உங்களது பால்ய சிநேகிதர்களை சந்தியுங்கள். ஏனென்றால் நாட்கள் செல்லச் செல்ல அது போன்ற வாய்புகள் உங்களுக்கு அரிதாகவே கிடைக்கும்.

நீங்கள் தினமும் செய்ய வேண்டியவை.:
புன்னகை பூத்த முகத்துடன் இருங்கள். நன்கு மனம் விட்டுச் சிரியுங்கள். ஓடுகின்ற தண்ணீர் ஒருபோதும் திரும்பி பின்னோக்கி ஓடுவதில்லை. வாழ்க்கையும் அது போன்றது தான். (தொடர்ந்சி 2 ம் பக்கம்)

அதை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குங்கள்.

ஆகவே நண்பர்களே !
வயோதிகத்தை நினைத்து பயம் அதிகம் கொள்ள வேண்டாம். சாபமாக எண்ணிச் சலிப்படையாமல் வயோதிகத்தை வரமாக எண்ணிப் போற்றி மகிழுங்கள்.

ஆறுதல் தேடி யாரின் தோளிலும் சாய்ந்து விடாதீர்கள். அணைத்துக் கொள்வது போல் உங்கள் முதுகில் குத்திவிடுவார்கள்.

நிம்மதி தேடி எவரின் மடியிலும் தூங்கி விடாதீர்கள். தலையை கோதுவது போல் உங்கள் தொண்டைக் குழியை நசுக்கி விடுவார்கள்.

உங்கள் பிரச்கினையைச் சொல்லி இன்னொருவரை கைகோர்த்து விடாதீர்கள். இதுதான் சந்தர்ப்பம் என்று உங்களை பயன்படுத்தி விடுவார்கள்.

சந்தோஷமாய் இருக்கலாம் என்று பழைய துயரங்களை யாரிடமும் மனம் விட்டுப் பேசி விடாதீர்கள். உடைந்த இதயத்தை மீண்டும் துண்டு துண்டாக்கி விடுவார்கள்.

நீங்கள் மீண்டு எழுவதற்கு இன்னொருவரின் உதவி தேவையில்லை. உங்களை நீங்கள் நம்பாத வரைக்கும் உங்களால் எதையும் அடைய முடியாது.

## *இப்படி தவறு செய்யலாமா ?*

ஒரு பெண்மணிக்கு கொழும்பில் வேலை கிடைத்தது. பெண்மணியும் தனியாகச் சென்று வேலையில் சேர்ந்தாள். அவளுக்கு தங்குவதற்கு வசதியான வீடும் கொடுத்தார்கள். அவள் இந்த விபரத்தை கணவனுக்கு தெரிவிப்பதற்காக தன் மொபைல் மூலம் குறுஞ்செய்தி (SMS) அனுப்பினாள். குறுஞ்செய்தி தவறுதலாக கணவனுக்கு பதில் வேறொரு நபருக்கு சென்று விட்டது. அந்த மனிதர் அப்பொழுது தான் தன் இறந்து போன மனைவிக்கு இறுதி கிரியைகளைச் செய்து விட்டு வீடு வந்தார். அவர் அந்த குறுஞ்செய்தியைப் படித்துவிட்டு மயங்கி விழுந்தார். அவரை அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அந்தக் குறுஞ்செய்தியில் கீழே உள்ளபடி எழுதியிருந்தது:-

“நான் இங்கு நல்லபடியாக வந்து சேர்ந்தேன். தங்குவதற்கு வசதியான இடமும் கிடைத்துள்ளது. நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். முடிந்தால் இரண்டொரு நாட்களில் உங்களையும் அழைத்துக் கொள்கிறேன்.”

இப்படிக்கு,

தங்கள் மனைவி

## *I love you Grandpa*

Every month Martín’s parents took a trip to see Grandma and came home on the same train the next day. One day the child said to his parents: "I'm already grown up. Can I go to my grandma's alone?" After a brief discussion, his parents accepted. They stood with him as he waited for the train to exit. They said goodbye to their son and gave him some tips through the window. Martin repeated to them: "I know. I've been told this more than a thousand times."
As the train was about to leave, his father murmured in his ear: "Son if you feel bad or insecure, this is for you!" And he put something in his pocket.

Now, Martin was alone, sitting on the train as he had wanted, without his parents for the first time. He was admiring the landscape through the window. Around him some unknowns pushed themselves in. They made a lot of noise. They got in and out of the train car. The conductor made some comments about him being alone. One person looked at him with eyes of sadness. Martin was feeling more uneasy with every minute that passed. And now he was scared. He felt cornered and alone. He put his head down, and with tears in his eyes, He remembered his dad had put something in his pocket. Trembling, he searched for what his father had given him. Upon finding the piece of paper he read it: "Son, I'm in the last train car!".

That's how life is, We must let our kids go. We must let them try new things. But we always like to be in the last car, watching, in case they are afraid or in case they find obstacles and don’t know what to do. We want to be close to them. as long as we are still alive.

## *That’s not my job !*

This is a story about four people named **Everybody, Somebody, Anybody** and **Nobody**. There was an important job to be done and **Everybody** was sure that **Somebody** would do it. **Anybody** could have done it, but **Nobody** did it. **Somebody** got angry about that, because it was **Everybody’s** job. **Everybody** thought **Anybody** could do it, but **Nobody** realised that **Everybody** wouldn't do it. It ended up that **Everybody** blamed **Somebody** when **Nobody** did what **Anybody** could have done.

# வானம் இருண்டு விடும்....

வானம் இருட்டாகிறது மெதுவாக. அனைவருக்கும் முதுமை வரும். ஆகவே முதியோருக்கும் முதுமையின் விளிம்பில் இருப்பவர்களுக்கும் மட்டுமல்லாமல் அனைவருக்கும் இது மிகவும் அருமையான செய்தி. வயதாகிவிடுவது என்பதை நாம் அனைவரும் மனதார ஏற்கத் தயார் செய்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை. பல முதியவர்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள் போல் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் குழந்தைகளைப் போலவே அறியாதவர்கள். பல முதியவர்கள் வயதானதும் அவர்கள் வாழ்க்கைப் பாதையில் எதிர் கொள்ளவேண்டிய பல விஷயங்களுக்கு முற்றிலும் தயாராக இல்லை. அறுபது வயதாகும் ஒரு நபருக்கு முதுமை தொடங்க ஆரம்பித்து இறுதிக்குள்ளாக அனைத்து விளக்குகளும் அணைந்து வானம் இருட்டாகி விடும். உங்கள் மனதில் ஏற்க வேண்டிய சில சூழ்நிலைகள் உள்ளன. நீங்கள் இதைப் புரிந்து கொண்டால் வர இருக்கும் விஷயங்களுக்கு தயாராக இருப்பீர்கள். கலவரமடைய மாட்டீர்கள்.

உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி தலைமுறையில் உள்ளவர்கள் பெரும்பாலும் எல்லோரும் சென்று விடுவார்கள். உங்கள் சகாக்களில் பலர் தங்களை கவனித்துக் கொள்ள முடியாமல் இருப்பார்கள். மேலும் இளைய தலைமுறையினர் அனைவரும் தங்கள் சொந்த வாழ்க்கையில் மும்முரமாக இருப்பார்கள். உங்கள் மனைவி அல்லது கணவர் கூட உங்களை விட முன்பே செல்ல நேரலாம். அதன் பின்னர் வரக்கூடியது வெற்று நாட்கள். நீங்கள் தனியாக வாழ்வது எப்படி என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் தனிமையை அனுபவித்து அரவணைக்க வேண்டும். சமூகம் உங்களை கவனிப்பதும் குறைவாகிவிடும். உங்களுடைய முன்னைய வாழ்க்கை எவ்வளவு புகழ் பெற்றதாக இருந்தாலும், அல்லது நீங்கள் எவ்வளவு பிரபலமாக இருந்தாலும் முதுமை உங்களை எப்போதும் ஒரு சாதாரண வயதான மனிதராகவும் வயதான பெண்மணியாகவும் மாற்றும். “ஸ்பொற்லைற்” இனி உங்கள் மீது பிரகாசிக்காது. ஒரு மூலையில் அமைதியாக நிற்பதில் நீங்கள் திருப்தியடையக் கற்றுக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு பின்னால் வரும் சந்ததிகள் மற்றும் காட்சிகளை பாராட்டவும் வேண்டும். அதோடு பொறாமைப் படவோ அல்லது முணுமுணுக்கவோ வேண்டும் என்ற துடிப்பை அடக்க வேண்டும். முன்னோக்கி செல்லும் பாதை தாரைகளாகவும் நிலையற்றதாகவும் இருக்கும். எலும்பு முறிவுகள் காடியோ வஸ்கியூலர் அடைப்புகள், புற்று நோய் என இவை அனைத்தும் உங்களுக்கு எந்த நேரத்திலும் வருகை தரக்கூடிய விருந்தினர்கள். அவற்றை நீங்கள் திருப்பி விட முடியாது. நீங்கள் நோயுடனும் வியாதிகளுடனும் வாழவேண்டி இருக்கும். அவர்களை நண்பர்களாக கூட பார்க்க வேண்டி வரலாம். உங்கள் உடலில் எந்த பிரச்சினையும் இல்லாமல் நிலையான அமைதியான நாட்களைப் பற்றி கற்பனை செய்ய வேண்டாம். ஆக்கபூர்வமான மனநிலையை பேணுவதும் போதுமான உடற் பயிற்சி என்பதும் உங்கள் கடமையாகும். அதை தொடர்ந்து மேலும் செய்ய ஊக்கமும் உங்களுக்கு வேண்டும். படுக்கைக்கு கட்டுப்பட்ட வாழ்க்கைக்கு தயாராகுங்கள். குழந்தை நிலைக்கு திரும்புங்கள். உங்கள் தாய்மார்கள் உங்களை ஒரு படுக்கையில் தான் இந்த உலகுக்கு அழைத்து வந்தார்கள். திருப்பங்கள், மேலும் திருப்பங்கள் மற்றும் போராட்ட வாழ்க்கைக்கு பிறகு நாங்கள் தொடக்க இடத்திற்கு, படுக்கைக்கு, மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டிய நிலைக்கு திரும்புகிறோம். ஒரே வித்தியாசம் என்னவென்றால், ஒரு காலத்தில் நம் தாய்மார்கள் நம்மைக் கவனித்துக் கொண்டார்கள். நாம் போகத் தயாராகும் போது கவனிப்பதற்கு உறவினர்கள் இல்லாமல் இருக்கலாம். உறவினர்கள் இருந்தாலும் அவர்களின் கவனிப்பு உங்கள் தாயின் கவனிப்பிற்கு ஒரு போதும் ஈடாகாது. உங்களுடன் உறவே இல்லாத செவிலியர்களால் நீங்கள் கவனிக்கப் படுவீர்கள். அவர்கள் முகத்தில் புன்னகையை அணிந்து கொள்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களது இதயங்களில் சோர்வு மற்றும் சலிப்பை சுமக்கிறார்கள். இதனால் சலனப்படாது இருங்கள்.

நன்றியுடன் இருக்க நினைவில் கொள்ளுங்கள். வழியில் பல மோசடி செய்பவர்களும் ஏமாற்றுபவர்களும் இருப்பார்கள். அவர்களில் பலர் வயதானவர்களுக்கு நிறைய சேமிப்பு இருப்பதை அறிவார்கள். மேலும் அவர்களின் பணத்தை ஏமாற்றுவதற்கான வழிகளை முடிவில்லாமல் நினைத்துக் கொண்டிருப்பார்கள். மோசடித் தொலை பேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள், அஞ்சல், பணத்தை இரட்டிப்பாக்கும் திட்டங்கள் என்று உங்களை அணுகுவார்கள். அவர்கள் விரும்புவதெல்லாம் உங்களுடைய எல்லா பணத்தையும் பெறுவதுதான். எனவே கவனமாக இருங்கள். உங்கள் பணத்தை உங்களுக்கு அருகாமையில் வைத்திருங்கள். ஒரு முட்டாளும் அவனது பணமும் விரைவில் பிரிந்துவிடக் கூடியவை. எனவே உங்கள் பணத்தை புத்திசாலித்தனமாக செலவிடுங்கள்.

வானம் இருட்டு முன் வாழ்க்கையின் பயணத்தின் கடைசி தூரம் படிப்படியாக மங்கலாக மிகவும் மங்கலாக இருக்கும். இயற்கையாகவே நீங்கள் முன்னேறிச் செல்லும் பாதையைப் பார்ப்பதும் கடினமாயிருக்கும். ஆகவே அறுபது வயதை எட்டும்போது வாழ்க்கையில் எதைப் பார்ப்பது? நம்மிடம் இருப்பதைப் போற்றுவது. நம்மால் முடிந்தவரை வாழ்க்கையை அனுபவிப்பது. குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகள் விவகாரங்களை நீங்களே எடுத்துக்கொள்ளாமல் இருப்பது மிகவும் நல்லது. அவற்றை அவர்களின் அம்மா அப்பா பார்த்துக் கொள்வார்கள். எளிமையுடன் இருங்கள். உங்கள் சொந்த வயதைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக செயல்படாதீர்கள். மற்றவர்கள் மனம் நோக பேச வேண்டாம். இது மற்றவர்களை புண்படுத்தும்

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அளவிற்கு உங்களையும் காயப் படுத்தும். நாம் வயதாக வயதாக மரியாதை என்றால் என்ன, அது எதைக் குறிக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். உங்கள் வாழ்க்கையின் பிற்காலங்களில் இதன் அர்த்தம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் பந்தங்களை விட்டுவிட மனதளவில் உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். இயற்கையின் வழி வாழ்க்கை முறை. அதன் ஓட்டத்துடன் சென்று சம நிலையுடன் வாழுங்கள்.

நாள் இப்போது தான் ஆரம்பித்தது அதற்குள் மாலை ஆறு மணியாகிவிட்டது. திங்கள் வந்தது போல் இருந்தாலும் அதற்குள் வெள்ளிக்கிழமை ஆகிவிட்டது. மற்றும் மாதம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. வருடமும் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. ஏற்கனவே நம் வாழ்வில் 60 அல்லது 70 அல்லது 80 ஆண்டுகள் கழிந்து விட்டன. நாம் நமது பெற்றோரை, நண்பர்களை இழந்துவிட்டோம் என்பதை உணருகிறோம். திரும்பி செல்வது காலம் கடந்த ஒன்று என்பதை உணருகிறோம். எஞ்சியிருக்கும் நேரத்தை முழுமையாக பயன்படுத்த முயற்சிக்கலாம். நாம் விரும்பும் செயல்பாடுகளை, தேடுதலை, நிறுத்த வேண்டாம். நம் எண்ணங்களுக்கு வண்ணம் தர வேண்டாம்.

வாழ்க்கையில் உள்ள சின்ன விஷயங்களைப் பார்த்துப் புன்னகைப்போம். இன்னும் எஞ்சியிருக்கும் நேரத்தை நாம் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். பிறகு என்பதை அகற்ற முயற்சிப்போம். பிறகு காப்பி ஆறிவிடும். பிறகு உடல் நலம் எம்மை விட்டுச் சென்றுவிடும். பிறகு அழகு அழிந்து விடும். பிறகு பகல் இரவாகிறது, பிறகு வாழ்க்கை முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பின்னர் என்று எதையும் தள்ளிப் போட வேண்டாம். இதனால் நாம் சிறந்த தருணங்களை இழக்கலாம். இப்போதே செய்ய வேண்டியதை நாளை வரை ஒத்தி வைக்கக்கூடிய வயதில் நாம் இல்லை.

## ஜனநாயகம்

ஒரு குடும்பத்தில் 3 ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். பாடசாலை விடுமுறையில் சுற்றுலா செல்லலாம் என முடிவெடுத்த போது ஆண் பிள்ளைகள் கடற்கரை இடம் ஒன்றினை விரும்பினார்கள். பெண் பிள்ளை மலைப் பிரதேசம் ஒன்றினை விரும்பியது. முடிவெடுக்க முடியாத நிலையில் ஜனநாயகம் நிலவும் குடும்பமாக வாக்கெடுப்பு நடாத்துவது என்று முடிவு செய்து வாக்களிப்பு நடாத்தப்பட்டது. இறுதியாக 3 க்கு 1 எனும் வாக்கில் கடற்கரைக்கு செல்வது என முடிவு செய்யப்பட்டது.

அடுத்த ஆண்டு மீண்டும் சுற்றுலா செல்ல முடிவெடுத்த போது மீண்டும் ஆண்கள் கடற்கரையையே விரும்பினார்கள். கடந்த முறை அங்கே சென்றதால் இம் முறை மலைப் பிரதேசம் செல்வோம் எனும் பெண் பிள்ளையின் கருத்து ஏற்கப்படவில்லை. தேர்தல் நடந்து 3க்கு 1 எனும் வாக்கில் கடற்கரைக்கு செல்வது என மறுபடியும் முடிவு செய்யப்பட்டது.

மூன்றாவது வருடம் மறுபடியும் ஆண்கள் கடற்கரையை விரும்ப பெண் பிள்ளை முதலில் சாப்பிடாமல் சத்தியாக்கிரகம் இருந்தது. அதற்கும் மசியாத நிலையில் வீட்டில் உள்ள பாத்திரங்களை உடைத்து எதிர்ப்பைக் காட்டியது.

நண்பர்களே இது தான் சில நாடுகளில் நடக்கின்றது. இரு வேறுபட்ட எண்ணங்கள், கலாச்சாரங்களைக் கொண்ட சமூகங்கள் பெரும்பான்மையாகவும் சிறுபான்மையாகவும் வாழும் நாட்டில் பெரும்பான்மையினர் தான் ஜனநாயக அதிகாரம் கொண்டிருப்பர். அவர்களின் தீர்மானங்கள் சிறுபான்மையினர் விடயத்தில் எப்போதும் நியாயமானதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

## சிந்தனைக்கு சில வரிகள்

- சில காயங்கள் மருந்தால் சரியாகும், சில காயங்கள் மறந்தால் சரியாகும்.
- வியர்வை துளிகள் உப்பாக இருக்கலாம், ஆனால் அவை வாழ்க்கையை இனிப்பாக மாற்றும்.
- மனிதனுக்கு பிரச்சினை, அதனால் கடவுளுக்கு அர்ச்சனை.
- கருப்பு மனிதனின் இரத்தமும் சிவப்புதான், சிவப்பு மனிதனின் நிழலும் கருப்புதான்.
- வீரன் சாவது இல்லை, கோழை வாழ்வதே இல்லை.
- உன்னை நீ செதுக்கிக் கொண்டே இரு, வெற்றி பெற்றால் சிலை, தோல்வி அடைந்தால் சிற்பி.
- உண்மை எப்போதுமே சுருக்கமாக பேசப்படுகிறது, பொய் எப்போதும் விரிவாகப் பேசப்படுகிறது.
- பேசிப் பேசியே நம்மை ஏமாற்றிவிடுகிறார்கள், என்பதெல்லாம் பொய் அவர்கள் பேச்சில் நாம் ஏமாந்துவிடுகிறோம் என்பதே உண்மை.
- குறைகளை தன்னிடம் தேடுபவன் தெளிவடைகிறான், குறைகளை பிறரிடம் தேடுபவன் களங்கப்படுகிறான்
- கடனாக இருந்தாலும் சரி அன்பாக இருந்தாலும் சரி, திருப்பி செலுத்தினால் தான் மதிப்பு
- உறவினர்களில் யார் முக்கியம் என்பதை உயிரற்ற பணமே முடிவு செய்கிறது
- பணம் கொடுத்துப் பார், உறவுகள் உன்னைப் போற்றும். கொடுத்த பணத்தை திரும்பக் கேட்டுப் பார் மண்ணை வாரி தூற்றும்
- அறுந்து போன செருப்புக்கு கூட வீட்டில் ஒரு இடமுண்டு, இறந்து போன மனித உடலுக்கு வீட்டில் ஒரு இடமும் இல்லை. இது தான் உண்மை. இதுவே மனித வாழ்க்கை

# வாழ்க்கைச் சக்கரம்

அவனுக்கு இரண்டு அக்காமாரும் ஒரு தங்கச்சியும். அப்பா சிகரெட் குடித்து குவித்ததால் நடு வயதிலேயே மாரடைப்பால் போய்ச் சேர்ந்திட்டார். இவனைத் தவிர எல்லாருக்கும் கல்யாணம் ஆகி புருஷன் வீட்டுக்கு போய்விட்டார்கள். இவன் குடும்பத்தில் ஓர் ஆணாய் இருந்து சகோதரிகளுக்கும் திருமணம் செய்து வைத்து பொறுப்புக்களை முடிக்கவே இவனுக்கு 45 வயதாய் விட்டது. இனி யார் பெண் கொடுப்பார்கள் இவனுக்கு. சகோதரிகள் புகுந்த வீடு போனதன் பின் அம்மாவும் அவனும் தான் வீட்டில்.

இவன் அம்மா சுகமாய் இருந்தவரைக்கும் நன்றாகப் பார்த்துக் கொண்டான். அம்மா அடிக்கடி கவலையுடன் சொல்லும் “நான் இருக்கிற வரைக்கும் உன்னைப் பார்த்துக் கொள்ளுவேன் அதன் பின் யார் பார்த்துக் கொள்வார்களோ” என்று. அதெல்லாம் எனக்குத் தெரியும் நான் கவனித்துக் கொள்வேன் என்று அவன் சொல்வான். இப்படியே காலம் போனது.

அன்று இரவு அம்மாவுக்கு உடம்புக்கு முடியாமல் போய் அவசரமாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவேண்டியாயிற்று. அம்மாவுக்கு ஒரு கையும் ஒரு காலும் பாக்கின்சன் வியாதியால் வழங்காமல் போய்விட்டது. இரண்டு நாளால் “இங்கு வைத்தியம் முடிந்து விட்டது இனி வீட்டுக்கு கொண்டு போய் பார்த்துக் கொள்ளுங்கள். ‘பிசியோதெரபி’ வைத்தியத்தால் முயற்சி பண்ணிப் பாருங்க” என்று சொல்லிவிட்டார்கள். வீட்டுக்கு கொண்டு வந்த பின் ஒரே படுக்கை தான். அப்பப்ப கைகளைப் பிடித்து கொஞ்சம் நடக்க வைப்பான். இப்போ சமையலும் அவனே செய்து தாய்க்கு மூன்று வேளையும் உணவை ஊட்டி விடுவான். பார்ப்பவர்கள் இவனுக்காவது ஒரு கலியாணம் காட்சி ஆகியிருந்தால் வந்தவ சாப்பாடாவது சமைப்பாளே என்று ஆதங்கப் பட்டார்கள்.

அடுத்து அவனுக்கு பேரிடியாக ஒரு இரவு அம்மா கக்கூசுக்குள் வழுக்கி விழுந்ததில் இடுப்பில் எலும்பும் ஒரு காலில் எலும்பும் முறிந்து விட்டது. படுக்கையை விட்டு எழ முடியாத நிலைக்கு அம்மா வர அவளின் இயற்கைக் கழிவுகள் படுக்கையிலேயே போக ஆரம்பித்தது. அவளின் உடையை மாற்றி அவளை சுத்தம் செய்து துணிகளையும் தோய்த்து, முகம் சுழிக்காது அவனே செய்தான். அந்தத் தாய் “ஒரு ஆம்பளைப் பிள்ளைக்கு இப்படிச் சோதனையைக் கொடுத்துட்டானே ஆண்டவன். என்னைச் சீக்கிரமே கூப்பிட்டுக் கொள் கடவுளே” என்று அழுதாள். அவன் அம்மாவின் கண்ணீரை துடைத்துவிட்டு சொன்னான் “நான் குழந்தையாய் இருந்த போது இதெல்லாம் நீ செய்தாய். இப்போது நீ என்னோட பிள்ளை. உனக்கு நான் செய்கிறேன். என்னுடைய குழந்தையென்றால் அது நீ தான்” இதை சொல்லும் போது அவன் கண்களிலும் நீர். .

கடவுளும் சோதனையை நிறுத்தவில்லை இன்னும் அதிகமாக்கி விட்டார். அம்மாவுக்கு திடீரென்று உதிரப் போக்கும் வந்துவிட்டது. “கடவுளே என்னை ஏன் இப்படி சோதிக்கிறாய்” என்று வாய்விட்டு கதறினாள். அப்போது பக்கத்து வீட்டில் வசிக்கும் நர்சம்மா உதவிக்கு ஓடி வந்தாள். அவள் மகனிடம் சொன்னாள் “இப்போ எல்லாவற்றுக்கும் ‘பாட்’ (pad) வந்துவிட்டது, தோய்த்துக் காயப் போடவேண்டிய தேவை இல்லை. மொத்தமாக வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். தேவையென்றால் என்னைக் கூப்பிடுங்க வந்து உதவி செய்கிறேன்” என்று ஆலோசனை கூறினாள். ஆனாலும் ‘பாட்’ மாத்துற வேலையும், அம்மாவை குளிப்பாட்டுற வேலையும் அவனே செய்தான். அப்போதெல்லாம் அந்த அம்மா கண்ணீர் விடும். அதற்கு அவன் சொல்வான் “அம்மா இந்த பாக்கியம் எனக்கு கிடைச்சிருக்கு. இது சுமையில்லை, வரம் நீ, வருத்தப் பட வேண்டாம்” என்று.

இத்துடன் நிற்கவில்லை, இன்னும் சோதனை வந்தது. வெளியே போவதில் சிக்கல் ஏற்பட்டது. அதனால் ‘எனீமா’ கொடுத்தால் தான் வெளியே போகும் என்ற நிலைமை ஆயிற்று. தினம் அம்மாவுக்கு எனிமா கொடுத்து வெளியே போக வைத்தான். நர்சம்மாவே ஒரு நாள் அழுதிட்டாள். “அண்ணே, கடவுளுக்கு மேல உங்களை வைத்துப் பார்க்கிறேன் எப்படி இப்படி எல்லாம் இருக்கிறீர்கள்?” என்றாள். அப்போது அவன் சொன்னான் “நான் பொறக்கும் போது சப்பாணியாய் பிறந்தேன். எட்டு வயது வரை நான் நடக்கவில்லை. அப்போதெல்லாம் நின்ற இடத்திலேயே ஒண்ணுக்கும் இரண்டுக்கும் போய்விடுவேன். அம்மா முகம் சுழிக்காமல் சுத்தம் பண்ணுவா. என் உடுப்புகளையும் கழுவி சுத்தம் பண்ணுவா. மற்றவர்களெல்லாம் இதைப் பார்த்து அருவருத்து திட்டுவார்கள். அதையெல்லாம் அவ தாங்கிக் கொள்வா. அப்போது நான் நினைத்துக் கொள்வேன் “அடுத்த ஜென்மத்திலை நான் அம்மாவாகி எனக்கு மகனாக அம்மா பிறக்கணும். நான் அவவுக்கு இதெல்லாம் செய்ய வேணும்” என்று

கடவுளும், உனக்கும் உங்க அம்மாவுக்கும் எதுக்குடா இன்னொரு ஜென்மம், இந்த ஜென்மத்திலயே தாறன் என்று கொடுத்திருக்காரு. அதை சரியாய் செய்யணும். ஆண்டவன் அதற்குண்டான மனோபலத்தை எனக்குக் கொடுக்கணும் என்று கண்ணில் நீர் கொட்ட சொன்னான்.

நர்சம்மா கண்ணிலும் நீர் அருவியாய் பாய்ந்தது. அப்போது என் அம்மா கேவி கேவி அழும் சத்தம் எம் இரண்டு பேரையும் உலுக்கி விட்டது.

-----அ. முத்துவிஜயன்

# ORDERING A PIZZA IN 2032

**Caller : Is this Pizza Hut?**

**Google : No sir, it's Google Pizza.**

**Caller : I must have dialled a wrong number, sorry.**

**Google : No sir, Google bought Pizza Hut last month.**

**Caller : OK. I would like to order a pizza.**

**Google : Do you want your usual, sir?**

**Caller : My usual? You know me?**

**Google : According to our caller ID data sheet, the last 12 times you called, you ordered an extra-large pizza with three cheeses, sausage, pepperoni, mushrooms and meatballs on a thick crust.**

**Caller : Super! That's what I'll have.**

**Google : May I suggest that this time you order a pizza with ricotta, arugula, sun-dried tomatoes and olives on a whole wheat gluten-free thin crust?**

**Caller : What? I don't want a vegetarian pizza!**

**Google : Your cholesterol is not good, sir.**

**Caller : How the hell do you know that?**

**Google : Well, we cross-referenced your home phone number with your medical records. We have the result of your blood tests for the last 7 years.**

**Caller : Okay, but I do not want your rotten vegetarian pizza! I already take medication for my cholesterol.**

**Google : Excuse me sir, but you have not taken your medication regularly. According to our database, you purchased only a box of 30 cholesterol tablets once at Lloyds Pharmacy, 4 months ago.**

**Caller : I bought more from another Pharmacy.**

**Google : That doesn't show on your credit card statement.**

**Caller : I paid in cash.**

**Google : But you did not withdraw enough cash according to your bank statement.**

**Caller : I have other sources of cash.**

**Google : That doesn't show on your latest tax returns, unless you bought them using an undeclared income source, which is against the law!**

**Caller : WHAT THE HELL!**

**Google : I'm sorry sir, we use such information only with the sole intention of helping you.**

**Caller : Enough already! I'm sick to death of Google, Facebook, Twitter, WhatsApp and all the others. I'm going to an island without the internet, TV, where there is no phone service and no one to watch me or spy on me.**

**Google : I understand sir, but you need to renew your passport first. It expired 6 weeks ago...**

## வருந்தாதே மனமே

உடம்பு தள்ளாட மனமும் தளர வெதுவெதுப்பாக தேனீர் குடித்தால் உடம்பு உசாராகுமென நினைத்த வள்ளியம்மை தலைமாட்டில் உள்ள சுடுதண்ணி போத்தலை எட்டி எடுத்து சில்வர் கப்பில் தேனீரை ஊற்றி குடிக்க முனைந்தவள் தோற்றுப் போய் மீண்டும் படுக்கையில் சாய்கிறாள். தன் இயலாமையை எண்ணி மனம் கலங்க கடைக்கண்களால் கண்ணீர் வழிகின்றது.

அதையும் மீறி மனச்சாட்சி "ஏய் நீ என்ன சிறு பிள்ளை என்ற நினைப்பா? எண்பது வயதை தாண்டி விட்டாய். உனக்கு கணவன் இல்லை என்றாலும் அன்பான பிள்ளைகள், கை நிறைய ஓய்வூதியச் சம்பளம். அம்மம்மா என உன்னைச் சுற்றி மழலைகள் கூட்டம். இதை விட வாழ்வில் என்ன வேண்டும் சொல்லு" என மனம் உறுத்த அம்மா இந்தாங்கோ தேத்தண்ணி என மகளின் குரல் கேட்டு வழிந்தோடிய கண்ணீரை சேலைத் தலைப்பால் துடைக்கின்றாள். அதைக் கண்ட மகள் சுவேதா பதறிக் கொண்டு "என்னம்மா கண்ணுக்குள் எதுவும் விழுந்து விட்டதா?" எனக் கேட்க "இல்லை இது ஆனந்தக் கண்ணீரம்மா உன்னை நான் பெற்றெடுக்க என்ன புண்ணியம் செய்தேனோ" எனக் கூறி மகளின் கரங்களை முத்தமிட சுவேதா தாயின் தலையை தடவி ஆதரவளிக்கின்றாள். அன்பான பிள்ளைகள் இருந்தால் முதுமையும் தோற்றுப் போகுமென எண்ணி தேத்தண்ணீரை உறிஞ்சி மட மடவெனக் குடிக்கின்றாள். உற்சாகம் பிறக்க பேரப்பிள்ளைகளை பள்ளிக்கு வழியனுப்ப கேற்றடி நோக்கி போகின்றாள்.